1973 நவம்பர் 21]

**மாண்புமிகு திரு. செ. மாதவன்:** தலைவரவர்களே, அந்தத் தொழிற்சாலையைச் சிறு தொழிலாக ஆரம்பிக்க வேண்டுமென்று முடிவு எடுத்து இருக்கிறோம். தஞ்சை மாவட்டத்தில் 20 இடங்களில் தொடங்கப்பட்டிருக்கிறது. அதற்கு அரசாங்கம் ஏராளமாகப் பண உதவி செய்கிறது. ஒரு சிறிய தொழிற்சாலை ஏற்படுத்தி கயிறு தயார் செய்ய வேண்டுமானால் சுமார் 10,000 தென்னை மரங்களாவது வேண்டும். அப்படியிருப்பதாகக் கூறி மனு செய்தால் உடனடியாக அந்தத் தொழிற்சாலையை ஏற்படுத்த அரசு உதவி செய்யும்.

**திரு. எஸ். வடிவேல்:** தலைவரவர்களே, தஞ்சை மாவட்டத்தில் எந்தெந்த இடங்களில் இந்தத் தொழிற்சாலைகள் நிறுவப்பட்டிருக்கின்றன? எத்தனைத் தொழிற்சாலைகள் என்பதை அமைச்சர் அறிவிப்பார்களா?

**மாண்புமிகு திரு. செ. மாதவன்:** எந்தெந்த இடங்கள் என்பது என் கைவசம் இல்லை. பட்டுக்கோட்டைப் பகுதியில் இருக்கிறது என்று நினைக்கிறேன். அண்மையில் தான் சென்று திறந்து வைத்து விட்டு வந்தேன். மொத்தம் 20 நிறுவப்பட்டிருக்கின்றன.

*Issue of pattas*

* 275 *Q.*—THIRU A. PARANDHAMAN: Will the Hon. the Minister for Revenue be pleased to state—

(*a*) whether there is any proposal under the consideration of the Government to give full powers to Tahsildars to issue Pattas (D. Forms) of poramboke lands to the landless; and

(*b*) if so, the details thereof?

**மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா:** (அ) இல்லை.

(இ) கேள்விக்கு இடமில்லை.

**திரு. ஆ. பரந்தாமன்:** தலைவரவர்களே, ஒரு சிறிய ஏழை புறம்போக்குப் பட்டா பெறவேண்டுமானால் முதலில் தாசில்தார் அவர்களுக்கு மனு செய்யவேண்டும், தாசில்தார் பரிசீலனை செய்து கோட்டாட்சித் தலைவருக்கு அனுப்பி, கோட்டாட்சித் தலைவர் பரிசீலனை செய்து மாவட்ட வருவாய்த்துறை அதிகாரிக்கு

அனுப்ப வேண்டும். அந்த முறையில் தானுகவே சிவப்பு நாடாத் தன்மை ஏற்பட்டு விடுகிறது. இதனுல் 10-15 ஆண்டுகள் ஆனுலும் பட்டா பெற முடியாத நிலை இருக்கிறது. ஆகவே, அந்த அதிகாரங்களை வட்ட அளவிலே தாசில்தார் அவர்களுக்கே கொடுக்க அரசு பரிசீலனை செய்யுமா?

மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா: தற்போதுள்ள போர்டு ஸ்டான்டிங் ஆர்டர் படி ரூ. 400 மதிப்புள்ள நிலங்களை தாசில்தார் ஒப்படை செய்யலாம், என்று அதிகாரம் கொடுக்கப் பட்டிருக்கிறது. ஆனல் அதற்கும் அதிகமாக விலையுள்ள மற்ற இடங்களைப் பொறுத்தவரையில், ரூ. 2,000 மதிப்புள்ள நிலங்களை கோட்டாட்சித் தலைவர் ஒப்படை செய்யலாம். ரூ. 5,000 மதிப் புள்ள நிலங்களை மாவட்ட வருவாய்த் துறை அதிகாரி அல்லது மாவட்ட ஆட்சித் தலைவர் ஒப்படை செய்யலாம், ரூ. 10,000 மதிப் புள்ள நிலங்களை வருவாய்த் துறை வாரியம் ஒப்படை செய்யலாம். அதற்கு மேல் மதிப்புள்ள நிலங்களை அரசாங்கத் தின் அனுமதி பெற்றுத்தான் ஒப்படை செய்ய வேண்டுமென்று உத்தரவுகள் பிறப்பிக்கப்பட்டிருக்கின்றன. அப்படிப்பட்ட உத்தரவுகள் தேவை என்று அரசு கருதுகிற காரணத்தால் அந்த உத்தரவுகளை மாற்றுவதற்கு முடியாது என்று தெரிவித்துக் கொள்கிறேன்.

* 276 வின—திரு. வீ. செல்லதுரை: மாண்புமிகு வருவாய்த் துறை அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினவுக்கு விடை யளிப்பாரா—

ஓமலூர் வட்டத்தில் தற்போது சாகுபடி செய்யத்தக்க வகையில் உள்ள பட்டா வழங்கப்படாத தரிசு நிலங்கள் எவ்வளவு உள்ளன?

மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா: ஓமலூர் வட்டத்தில் சாகுபடி செய்யத்தக்க அரசுத் தரிசு நிலத்தின் பரப்பளவு சுமார் 800 ஏக்கர். சேலம் உருக்காலைத் திட்டம் தொடர்பாக பிறப்பிக்கப்பட்டுள்ள நில ஒப்படைத் தடை உத்தரவு நடைமுறையில் உள்ளதால் மேற்கூறிய 800 ஏக்கராவில் 400 ஏக்கரா நிலங்களை ஒப்படை செய்ய இயலாது.